பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 31 சனிக்கிழமை 13.06.2020 கதிர் 220

இனி துரகசியம் அல்ல!

இன்றைய இந்தப் பத்தியிலே சில விடயங்களை மனந்திறப்பது பொருத்தமானது என நினைக்கிறேன்.

யுத்தம் முடிந்து ஒன்பது, பத்து மாதங்களில் – அதாவது 2010 பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலோடு பக்கம் 02

## சிறுபான்மையின மக்கள் மீது மத அடிப்படையில் பாகுபாடு



### இலங்கை குறித்து அமெரிக்கா அறிக்கை

கொழும்பு, ஜூன் 13

மத அடிப்படையில் சிறுபான்மையின மக்கள் மீது இலங்கை அரசால் திட்டமிட்ட பாகுபாடு தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டு வருவதாக சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அறிக்கையில் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவினால் 4

## தேர்தல் முடிவு வெளியாக ஓரிரு தினங்கள் ஆகுமாம்!

கொழும்பு, ஜூன் 13

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அறிவிக்க இரண்டு அல்லது மூன்று தினங்களாகும் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகள் நடைபெறும் தினமான ஒகஸ்ட் 5ஆம் திகதி இரவு வாக்கெண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாது எனவும், வாக்குப் பெட்டிகள் அதி உயர் பாதுகாப்புக்கு மத்தியில் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் வைக்கப்படவுள்ளதாகவும் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் 4

## இரு வேறு விதமாக நடக்கிறது பொலிஸ்

### மஹிந்த தேசப்பிரிய விசனம்



கொழும்பு, ஜூன் 13

சிலருக்கு எதிராகப் பொலிஸார் கடும் அடக்குமுறை கொள்கையைக் 4

# மர்மப் பொருள் வெடிப்பு படை அதிகாரி படுகாயம்

### வல்லைவெளியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் – நெல்லியடிப் பொலிஸ் பிரிவு, வல்லைவெளிப் பகுதியில் நடந்த வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த அந்த அதிகாரி பலாலி இராணுவ முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. 2

## சஜித் தரப்பின் வேட்புமனுக்களை நிராகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 13

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள சஜித் பிரேமதாஸ தலைமையிலான 294 பேருடனான ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனுக்களை நிராகரிக்க வேண்டுமெனக் கோரி ஐக்கிய தேசியக்கட்சி 2

## பொலிஸாரின் தாக்குதலுக்கு எதிராக நேற்று முறைப்பாடு!

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு – கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தபோது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முன்னிலை சோசலிசக் கட்சியினர் நேற்று 4

## நல்லாட்சியா? படுகொலையாட்சியா? ஒகஸ்ட் 5இல் மக்கள் தீர்மானிக்கட்டும்

### ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் நல்லாட்சி வேண்டுமா? அல்லது படுகொலையாட்சி வேண்டுமா? என்பதை எதிர்வரும் ஒகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தீர்மானிக்க 4

## தேர்தலில் போட்டியிடாது விலகினாலும் மங்கள மீதான விசாரணை தொடருமாம்

### மஹிந்த அணி கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 13

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தேர்தலில் போட்டியிடாது விலகினாலும் அவர் சம்பந்தமாக நடக்கும் விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெறும். அவற்றுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது.

– இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் அனுருத்த ஜயரத்ன தெரிவித்தார்.

முன்னாள் நிதி அமைச்சரான ரவி கருணாநாயக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துகொண்டாலும் அது குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை 2

## ஐ.தே.கவுடன் மங்கள சங்கமிக்கவேண்டும்

### நவீன் பகிரங்க அழைப்பு



கொழும்பு, ஜூன் 13

மங்கள சமரவீர அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வு பெறப்போவதாகத் தெரிவிக்கவில்லை. அவர் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றே கூறியிருக்கின்றார். 4




## கொரோனாத் தொற்று 1,879 நேற்று இருவரே அடையாளம்

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 02 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா தொற்றியவர்களின் எண்ணிக்கை 1,877 இலிருந்து 1,879 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முல்லைத்தீவு, விடத்தல்பளை ஆகிய இடங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 2 கடற்படையினரே கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு 2

## சஜித் இன்று நடுவீதியில் சகாக்கள் மூவர் விலகல்

### தேர்தலின் பின் பலர் மொட்டுவுடன் இணைவர் என்கின்றார் சேமசிங்க



கொழும்பு, ஜூன் 13

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் போன்று அரசியலில் முன்னேறலாம் என்ற நோக்கத்திலேயே முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய 2

## இனி இது ............

யாழ்ப்பாணத்திலிருந்தும், கொழும்பிலிருந்தும் வெளியாகும் இரண்டு பத்திரிகைகளுக்கு ஒரே சமயத்தில் ஆசிரியர் என்ற பொறுப்பிலிருந்து எனது பணியும் முடிவுக்கு வந்தது.

அடுத்த மூன்று, நான்கு ஆண்டுகள் ஊடகத் துறையில் இருந்து நான் விலகியிருந்தேன். அந்தக் காலகட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கட்சியின் கொழும்புக் கிளையைப் புனரமைக்கும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டது. கொழும்புக் கிளைத் தலைவராகத் தெரிவான சட்டத்தரணி கே.வி.தவராஜாவின் வழிகாட்டலில் செயலூக்கம் மிக்க கிளையாக அதனை மாற்ற என்னால் முடிந்தது. தந்தை செல்வா நினைவுப் பேருரை நிகழ்வுகளை சில ஆண்டுகள் உயர்ந்த தரத்தில் எம்மால் நடத்த முடிந்தது. அத்தகைய நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு ஒரு தடவை நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் வந்தபோதுதான் 'விக்கி – சம்பந்தன் அரசியல் நல்லுறவு' மலர்ந்தது. அதன் விவரங்களை பிறிதொரு சமயத்தில் விளக்கமாகத் தருவேன். அந்தக் கட்டத்திலேயே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. கட்சியின் ஊடகச் செயலாளராகவும் நான் அறிவிக்கப்பட்டேன்.

அந்தக் காலகட்டத்திலே முன்னாள் போராளிகளை – விடுதலைப் புலிகளை – கட்சிக்குள் சேர்க்க வேண்டும் என்ற என்னுடைய குரல் பல மட்டங்களில் ஒலித்தது. மத்திய குழுக் கூட்டம் வரை நான் அதனைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தினேன். ஆனால் அந்தக் குரல் ஏகாந்தமாகவே ஒலித்தது. அதற்குக் காரணம் இருந்தது.

யுத்தம் முடிவுற்ற காலகட்டத்தில் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே நின்று கொண்டு புலிகளின் செயற்பாட்டை கொள்கை அளவிலேனும் வெளிப்படையாக – பகிரங்கமாக – சிலாகித்து வந்தவன் நான் ஒருவனே. (முன்னாள் சிவகரன் போன்ற வேறு சிலரும் இருந்தனர் என்பதை மறுக்க முடியாது)

ஏனையோர் 'அஹிம்சை வழி வந்த தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் நாங்கள். நாம் எப்படி ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகளை எங்கள் சக உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளலாம்?' என்ற நினைப்பில் இருந்தனர். மிதப்பிலும் இருந்தனர்.

இந்த எண்ணம் கட்சித் தலைவரிடமிருந்து நீண்ட நாள் உறுப்பினர்களான பலர் வரையிலும் இருந்தது. நான் ஆயுதம் ஏந்திப் போராடாதவன் என்ற முறையில் சக உறுப்பினனாக என்னை ஏற்றுக் கொள்ள முடிந்த அவர்களால், அன்றைய நிலையில் முன்னாள் புலிகளை சக உறுப்பினர்களாக ஏற்க முடியவில்லை.

இன்னொரு காரணமும் இருந்தது. வெளிப்படையாகப் புலி ஆதரவு நிலைப்பாட்டைப் பகிரங்கமாக எடுத்தால் வரப் போகும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் கட்சித் தலைமை தங்களை வெட்டி ஒதுக்கி விடுமோ என்ற பயமும் இயல்பாகவே புலி ஆதரவுப் போக்கை மனதில் கொண்டிருந்த இளம் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் இருந்ததை நான் அவதானித்தேன்.

2013 இல் வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பிரசார ஆரம்ப காலத்தில் முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் கூட புலி ஆதரவுப் போக்கைக் கைக்கொள்ளப் பின்னடித்தார் என்பது மறுக்கக் கூடியதல்ல.

தமிழரசுக் கட்சி இலங்கையில் இருந்தாலும் அவர்களை இயக்கும் ஞானத் தந்தையர் அயலில் எங்கிருக்கின்றனர் என்ற இரகசியம் அப்போது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. புலி ஆதரவு நிலைப்பாட்டைத் தாங்கள் வெளிப்படையாக எடுத்தால், அவர்கள் பெயர் சுட்டித் தங்களை வெட்டி விடச் சொல்லி விடலாம் என்ற பயமும் சிலருக்கு இருந்தது. அதுவும் முன்னாள் புலிகளை தமிழரசுக் கட்சியில் சேர்க்க வேண்டும் என்ற எனது கோரிக்கைக்கு ஆதரவு கிட்டாமல் போனமைக்குக் காரணம் என்பேன். சில சமயங்களில் கட்சிக்குள் நான் திட்டமிடப்பட்டு வெட்டி ஒதுக்கப்பட்டேனோ என்ற எண்ணம் என் மனதில் அவ்வப்போது எழுவதற்கும் இதுதான் காரணமோ நானறியேன்.

ஆனால், ஒரு விடயம். யுத்தம் முடிந்த கால கட்டத்தில் இருந்து அடுத்த மூன்று, நான்கு ஆண்டுகள் இந்த விடயத்தைக் கட்சிக்குள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் முன்னின்று தனித்து முன்வைத்து வந்தவன் நானே.

கட்சிக்குள் ஏகாந்தமாக ஒலித்த எனது அந்தக் கோரிக்கைக்கு மத்திய குழுவிலும் பிற இடங்களில் ஒரே ஒருவர்தான் பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் ஆதரவுக் குரல் தந்து அதனை வழிமொழிந்து வந்தார். அது எம்.ஏ.சுமந்திரன்.

இன்று, அவருடைய அரசியலுக்காக நான் இதனைக் கூறுகின்றேன் என்று கொள்ள வேண்டாம். அது விடயத்தை நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் அளித்த பல பேட்டிகளில் குறிப்பிட்டிருக்கின்றேன். நேற்றும் கூட அத்தகைய பழைய பேட்டி ஒன்றின் பதிவை –வெளிநாட்டு வானொலி ஒன்றுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் அளித்த ஒலியோ செவ்வியை – முகப்புத்தகத்தில் வெளியிட்டிருந்தார் நண்பர் ஒருவர்.

*"முன்னாள் புலிகளைக் கட்சியில் சேர்க்க வேண்டும் என்ற எனது கோரிக்கையை ஒரேயொருவர்தான் அப்போது வரவேற்று, வழிமொழிந்து, ஆதரவு தந்து நின்றார். அவர் யார் என்று கூறினால் நீங்கள் ஆச்சரியப்படக் கூடும். அவர் சுமந்திரன்தான். இப்போதும் அவர் அதை மறுக்க மாட்டார் என்று நம்புகிறேன்"* என அந்தப் பேட்டியில் சில வருடங்களுக்கு முன்னர் நான் தெரிவித்திருந்தேன்.

2014 இல் கொழும்புக் கிளைச் செயலாளர் என்ற முறையில் கட்சியின் கொழும்புக் கிளை கூட்டத்தைக் கூட்டி, பொறுப்பை புதிய செயலாளரிடம் ஒப்படைத்து விட்டு கட்சியிலிருந்து வெளியேறிய போதும் அதனை சுமந்திரனிடம் தெரிவித்தேன். முன்னாள் போராளிகளுக்காக ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தும் எனது திட்டத்தை அப்போது அவருக்குத் தொலைபேசியில் கோடிகாட்டினேன். அது அவருக்கு நினைவிருக்குமோ தெரியவில்லை.

அனைத்துப் பத்திரிகைகளிலும் விளம்பரம் கொடுத்து, அறிவித்தல் விடுத்து, முன்னாள் போராளிகளுக்காக ஒரு கட்டமைப்பை நான் முதன் முதலில் ஆரம்பித்தபோது அதற்காகக் கடும் அழுத்தங்களை நான் எதிர்கொண்டேன். அன்றைய நிலையில் அது காலம் முந்திய செயலாக இருக்கலாம்.

அந்தப் போராளிகளின் பிரதிநிதிகளை மாவட்டத்துக்கு ஓரிருவராக அழைத்துக் கொண்டு வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்துக்குச் சென்றேன். அவர்களையும் கூட்டமைப்பில் சேர்த்து தேர்தலில் போட்டியிடுமாறு கோருவது எங்கள் நோக்கமாக இருந்தது. மிகுந்த நெருக்கடிக்குப் பின்னர் சந்திப்புக்கு வாய்ப்புக் கிடைத்தது.

சம்பந்தன், மாவை, செல்வம், சித்தார்த்தன், சுரேஷ் ஐவருக்கும் முன்னால் போய் அமர்ந்தோம். இன்று சுமந்திரனைப் போட்டுத் தாக்கும் சுரேஷும் அமர்ந்திருந்தார். ஏனோ சுமந்திரன் அங்கு இருக்கவில்லை. நாங்கள் போய் அமர்ந்ததுமே போராளிகளைப் பார்த்து *"உங்கள் மத்தியில் இருந்துதான் கருணா வந்தார். உங்கள் மத்தியில் இருந்துதான் பிள்ளையான் வந்தார். உங்கள் மத்தியில் இருந்துதான் கே.பி. வந்தார். உங்களையும் அரச புலனாய்வாளர்கள்தான் தயார் பண்ணி அனுப்பியிருக்கின்றார்கள் என்று கூறுகின்றனரே!"* என்று அவமானப்படுத்தினார் சம்பந்தன். இப்போது போராளிகளுக்காகக் குரல் எழுப்பும் சுரேஷும் கூட அதனை மௌனமாகக் கேட்டு ஆமோதித்துக் கொண்டிருந்தார்.

இந்தப் போராளிகளை உங்களுடன் சேர்த்து அவர்களுக்கும் தேர்தல் மாவட்டத்தில் ஓரிடத்தைக் கொடுத்து உங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள் என்று கோரப்போன எமக்குப் பெரும் அவமானமாகப் போயிற்று. அந்தப் போராளிகளை அரச ஒட்டுக் குழுக்கள் போல பேசிய சம்பந்தனின் பாங்கு மனதைப் பெரிதும் விசனமடைய வைத்தது. அதன் பின்னர்தான் அவர்களை எந்த ஆதரவும் இன்றி தனித்து யாழ் தேர்தலில் நான் களம் இறங்க வைத்தேன். இன்று 'ஜனநாயகப் போராளிகள்' என்று அவர்கள் தனித்து இயங்குகின்றார்கள். இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி அவர்களை அரவணைத்து கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அவர்களுக்கும் தனது வட்டாரங்கள் சிலவற்றை ஒதுக்கிக் கொடுத்தது. கட்சியின் மூத்த தலைவரான சம்பந்தனால் 'அரச புலனாய்வாளர்களின் முகவர்கள்' என்று முகத்துக்கு நேரேயே விமர்சிக்கப்பட்டவர்கள் இன்று அக்கட்சியுடன் சேர்ந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாக இருப்பது மகிழ்ச்சியே. புலிகளின்பால் எப்போதும் பரிவு கொண்டிருக்கும் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தின் பங்களிப்பு இதில் மதிப்புக்குரியது.

முன்னாள் புலிப் போராளிகளுக்கு தமிழரசுக் கட்சி இடமளிக்க வேண்டும் என்ற எனது வற்புறுத்தல் – கோரிக்கை – யுத்தம் முடிந்த அடுத்த ஒரு வருடத்தில் இருந்து மூன்று, நான்கு வருடங்கள் கட்சிக்குள் நீடித்தது. அந்தக் காலகட்டத்தில் எனக்கு அவ்விடயத்தில் கருத்தியல் ரீதியாக ஆதரவுக் கரம் நீட்டியவர் சுமந்திரன் மட்டுமே என்பேன்.

அந்த நேரத்தில் – மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் – அதனை விபரீதமான ஒரு கோரிக்கையாக நோக்கியவர்கள், இன்று குறைந்தபட்சம் சாதகமான ஒன்றாகப் பரிசீலிக்க முற்பட்டிருக்கின்றமை எனது எண்ணத்துக்குக் கிடைத்த வெற்றி தான்.

– மின்னல் –

## சஜித் தரப்பின்............

யின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தாக்கல் செய்துள்ள மனுவுக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனுவிலேயே அகில விராஜ்காரியவசம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமது சட்டத்தரணியின் ஊடாக இந்த ஆட்சேபனையைத் தாக்கல் செய்துள்ள அகிலவிராஜ் காரியவசம், மனுதாரர் தமது மனுவில் பல உண்மைகளை மறைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டத்தின்போது சஜித் பிரேமதாஸவை தலைவராகக் கொண்டு பொதுத்தேர்தலில் போட்டியிடும் வகையில் முன்னணி ஒன்றை அமைக்க ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்தது.

அத்துடன் அந்த முன்னணிக்கான யாப்பு மற்றும் சின்னம் ஆகியவை தொடர்பிலும் மத்திய செயற்குழு கலந்துரையாடியது.

எனினும் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் பலர் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தி என்ற அரசியல்கட்சியைப் பதிவு செய்து அதன் தலைவராக சஜித் பிரேமதாஸவையும் பொதுச்செயலாளராக ரஞ்சித் மத்துமபண்டாரவையும் தெரிவு செய்தனர்.

இது ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பை மீறும் செயலாகும் என்று காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஐக்கிய மக்கள் சக்தியின் மனுவை நீதிமன்றம் நிராகரிக்கவேண்டும் என்று காரியவசம் தமது ஆட்சேபனை மனுவில் கோரியுள்ளார்.

## மர்மப் பொருள்............

நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வல்லைவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரும் இராணுவச் சிப்பாய்கள் இருவரும் நேற்று மாலை நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் விழுத்திவிட்டுச் சென்ற பொதியை அவதானித்த இராணுவ அதிகாரி, அதனைப் பிரிக்க முற்பட்ட போது அது வெடித்து சிதறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொரோனாத்............

அறிவித்துள்ளது.

இதேவேளை, தொற்றுக்குள்ளான மேலும் 46 பேர் குணமடைந்துள்ளனர். இதன்படி தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,196 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனா வைரஸால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 672 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 57 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

## தேர்தலில் போட்டி............

எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

குற்றவாளிகளும், மோசடியாளர்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டாலும் அவர்கள் செய்த தவறுகளில் இருந்து தப்பிக்க இடமளிக்கப் போவதில்லை – என்றார்.

## சஜித் இன்று நடுவீதி........

மக்கள் சக்தியை உருவாக்கினார். ஆனால், இவரது நோக்கம் இன்று தோல்வியடைந்துள்ளது. அவர் இன்று நடுவீதிக்குவரவேண்டியநிலைமைஏற்பட்டுள்ளது.

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுத்தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்தோம். அரசியல் ரீதியில் எமது நோக்கங்கள் ஒருமித்ததாகக் காணப்பட்டன. இதன் காரணமாகவே மக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தை எம்மிடம் ஒப்படைத்தார்கள்.

எமது வழிமுறையைப் பின்பற்றியே முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார். ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சிக்கு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொறுப்புக்கூற வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஒன்றும் தற்போது பலம் பெறவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்த சஜித்தின் சகாக்கள் மூவர் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து சுயமாகவே விலகியுள்ளனர்.

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர பொதுத்தேர்தலில் இருந்து போட்டியிடுவதில் இருந்து விலகிக்கொண்டுள்ளார். இவரது தீர்மானத்தின் பின்னணியில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளார் என்ற விடயம் அனைவரும் அறிந்ததே. பொதுத்தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியில் இவருக்கு முக்கிய பதவி வழங்கப்படும்.

பொதுத்தேர்தலில் ஆளும் தரப்புடன் போட்டியிடுவதற்குப் பலமான எதிர்க்கட்சி ஒன்று தற்போது கிடையாது. மூன்றில் இரண்டுக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று எம்மால் பலமான அரசை அமைக்க முடியும். என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது – என்றார்.

# யாழ். பல்கலைக்கு துணைவேந்தராக இராணுவ அதிகாரியா? இல்லை என்கின்றார் மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர்!

கொழும்பு, ஜூன் 13,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஓர் இராணுவ அதிகாரியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபகுக்ஷ துணைவேந்தராக நியமிக்கப் போகிறார் என்ற செய்தியில் உண்மை இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்வேறு உயர் பதவிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இராணுவ உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வரும் நிலையில், கடந்த ஒரு வருட காலத்துக்கும் மேலாக வெற்றிடமாகவுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கடந்த 9 ஆம் திகதியுடன் விண்ணப்பங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு இராணுவ அதிகாரியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ துணைவேந்தராக நியமிக்கப் போகிறார்



என்று அரசல், புரசலாகச் செய்திகள் வெளிவந்திருந்தன.

இது பற்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு யாரெல்லாம் விண்ணப்பித்திருக்கிறார்கள்? ஓர் இராணுவ அதிகாரி துணைவேந்தராக வருவதற்கு வாய்ப்புகள் உள்ளனவா? – என்று அவரிடம் கேட்ட போது அவர் –

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் வெற்றிடத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்போது சிரேஷ்ட பேராசிரியர் கந்தசாமி தகுதி வாய்ந்த அதிகாரியாக இருக்கிறார். புதிய துணைவேந்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை அவரே துணைவேந்தராகச் செயற்படுவார். இராணுவ அதிகாரி ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப்படப்போகிறார் என்பதில் எந்தவித உண்மையும் இல்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கல்வித் துறை சார்ந்த விடயங்களில் மிகக் கவனமாகவே செயற்படுகிறார். அவர் ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் ஹோமகமவில் அமைந்துள்ள மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் நியைத்திலும், கம்பஹாவில் அமைந்துள்ள களனி பல்கலைக்கழகத்தின் விக்கிரமராச்சி ஆயுர்வேத பயிற்சி நிலையத்திலும் முன்னாள் இராணுவ அதிகாரிகளே தகுதி வாய்ந்த அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். ஜனாதிபதி பதவியேற்றவுடன் அவற்றில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். கலாநிதி சுனில் ஜெயந்த நவரட்ண மற்றும் சிரேஷ்ட பேராசிரியை ஜனித்தா லியனகே ஆகிய புலமைசார் கல்வியியலாளர்கள் அந்த இடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதே போலவே, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கும் உயர் கல்வித் தகுதியுடைய சாதாரண குடிமக்களான கல்வியியலாளர்களில் ஒருவரே துணைவேந்தராக வர முடியும். இராணுவ அதிகாரிகள் எவரும் துணைவேந்தராக வரவே முடியாது. தேர்தல் நெருங்கும் இவ் வேளையில் இத்தகைய வதந்திகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும். – என்றார்.

## 225 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொழும்பு, ஜூன் 13

பிலிப்பைன்சில் சிக்கி இருந்த 223 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் இரவு, இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்றில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதுடன், அதன் முடிவுகள் கிடைக்கும் வரை அவர்கள் விமான நிலைய வளாகத்தில் உள்ள விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஜப்பானில் தங்கியிருந்த இலங்கை கடற்படைச் சிப்பாய்கள் இருவரும் நேற்று அதிகாலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

## லீசிங் நிறுவனங்கள் இனிமேல் வாகனங்களை பறிக்க முடியாது

### பதில் பொலீஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி அறிவுறுத்ததல்



கொழும்பு, ஜூன் 13

தவணைக் கடன் வசதியில் வாகனங்களை வாடகைக்கு விடும் நிறுவனங்கள், வாடகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் நபர்களிடமிருந்து வாக்னங்களை அடாத்தாகப் பறிப்பது சட்ட விரோதமானதாகும். இத்தகைய நடவடிக்கைகள் தொடருவதற்கு அனுமதியளிக்க வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்தத் தவறும் வாடிக்கையாளர்களிடமிருந்து, அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும், வாகனங்களைப் பறிப்பதற்கும் கைக்கொள்ளப்படும் நடைமுறைகள் மிக மோசமானவையாகும். நிறுவனங்கள் வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்கு முன்னர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதில்லை. பறிமுதல் செய்துவிட்டே பொலிஸ் முறைப்பாட்டைச் செய்கிறார்கள். இவ்வாறு அடாத்தாகச் செயற்படுவது வன்முறைக்கு வழிவகுக்கிறது. எனவே பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில் எந்தவொரு முறைப்பாட்டையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியிருக்கிறார்.

மேலும், கொரோனா பெருந்தொற்றுக் காலப்பகுதியில் – கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் படி, லீசிங் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடம் இருந்து லீசிங் அறவிடப்படுவது 6 மாத காலப்பகுதிக்குப் பிற்போடப்பட்டிருந்தது.

இந் நிலையில் லீசிங் பணத்துக்காக பொதுமக்களைச் சிரமப்படுத்துவது அரசாங்க உத்தரவை மீறும் செயலாகும். எனவே தவணைப் பணத்தைக் கட்டாத காரணத்தினால் வாகனங்களைப் பறிமுதல் செய்ய அனுமதிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என ஜனாதிபதி செய்திப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.வேட்பாளர்கள் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று மாலை மாட்டீன் வீதியில் உள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியில் 7 வேட்பாளர்கள், புளொட் அமைப்பில் இருவர் மற்றும் ரெலோவில் ஒருவருமாகக் கூட்டமைப்பின் 10 வேட்பாளர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்தும் அதற்கான பரப்புரைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது, அதிக ஆசனங்களைப் பெறும் வகையில் செயற்படும் வழிவகைகளும் தற்போதைய கொரோனா அச்ச சூழலில் சுகாதார வழிவகைகளுடன் சந்திப்புக்களை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் உள்ளிட்ட சில கட்சியின் மூத்த செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.



northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 | 021 567 5566
077 336 6443 | 021 222 9581
075 555 7327 | 021 222 2050
071 777 2377 | 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தாமதித்த நீதி பயனற்றது

**ஆணைக்குழுக்கள் என்றாலே கண்துடைப்பு நாடகம் என்று பலருக்கும் எண்ணத் தோன்றும்.**

**நடந்த சம்பவங்கள், விடயங்கள் குறித்து விசாரணை செய்வதற்கும், உரிய பரிந்துரைகளைச் செய்வதற்கும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றமை வழமைதான்.**

**ஒரு விவகாரம் தொடர்பில் பதற்ற நிலையைத் தணித்து – தவிர்த்து – அது குறித்து நீதி, நியாயமான விசாரணைகள், ஆராய்வுகள் நடக்கின்றன என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி, காலத்தை இழுத்தடித்து, கடைசியில் கிணற்றில் போட்ட கல்லாக விடயத்தை அமுங்கிப் போய் விடப் பண்ணும் தந்திரோபாயங்களில் ஒன்றுதான் இந்த ஆணைக்குழு விளையாட்டு என்பது பலருக்கும் தெரிந்த பரகசியம்தான்.**

**பொதுவாக இந்த ஆணைக்குழுக்கள் காலத்தை இழுத்தடிப்பன மட்டுமல்ல, பெருமளவு நிதியையும் வீண் விரயமாக்குவன.**

**அதுவும் ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் என்றால் விசேடமாகக் கூறித்தான் அறிய வேண்டும் என்பது இல்லை. இதுவரை அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகள் நியமித்த விசேட ஆணைக்குழுக்கள் பற்றிய விவரங்களையும், அவை முன்வைத்த அறிக்கைகள், பரிந்துரைகள் போன்றவற்றையும், அவற்றுக்கு விரயமான நிதி விவரங்களையும் ஆராயப் புறப்பட்டால் மலைக்க வைக்கும் புள்ளிவிவரங்கள் வெளியாகக் கூடும். பல ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் என்ன வாயிற்று என்பதை அறிவதற்குத் தனியான ஆணைக்குழு நியமிக்க வேண்டி வந்தாலும் வரலாம்.**

**அப்படி ஆணைக்குழு என்ற பெயரைக் கொண்டிருப்பதாலோ என்னவோ, நாட்டில் மிக முக்கிய – பிரதான – சர்வதேச முக்கியத்துவம் மிக்க – மனித உரிமைகள் ஆணைக்குழுவும் மக்களின் நம்பிக்கைக்கு உரிய கட்டமைப்பாக மாறாமல் இன்னும் இழுபறித்தோற்ற நிலையிலேயே உள்ளது.**

**இலங்கையை மட்டுமல்லாமல், முழு உலகையுமே கொரோனா வைரஸ் பேரிடர் தாக்கியபோது நாடுகள் அனைத்தும் முதல் நடவடிக்கையாக முன்னெடுத்தது தத்தமது நாட்டை முடக்கும் செயற்பாட்டைத்தான். இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல.**

**நாட்டை முடக்குவதற்கு அத்தியாவசியமானது ஊரடங்கு உத்தரவு. எனவே கொரோனாத் தொற்றுப் பேரபாயம் ஏற்பட்டதும் ஏனைய நாடுகளைப் போல இலங்கையிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.**

**ஆனாலும் அது சட்ட முறைப்படி பிறப்பிக்கப்படவில்லை. ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தன்பாட்டில் அறிவிக்கும் ஊரடங்கு உத்தரவை மக்கள் எந்தக் குழப்பமும் பிணக்குமின்றி ஏற்றுக்கொண்டு, கட்டுப்பட்டு நடந்தனர்; தொடர்ந்து நடக்கின்றனர்.**

**கொரோனாப் பேரிடர் போன்ற பெரும் நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் விடயத்தில் நுணுக்கமாக சட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முதலில் விடயத்தை ஒப்பேற்றுவதுதான் அவசரமானது. அந்த வகையில் முழுத் தேசமுமே அந்த ஊரடங்கு உத்தரவை ஏற்றுக் கட்டுப்பட்டுச் செயற்பட்டது;செயற்படுகின்றது.**

**இலங்கையில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு மூன்றாவது மாதத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இன்னும் அந்த ஊரடங்கு, அதற்குரிய சட்ட முறைப்படி நடைமுறைப்படுத்தப்படவில்லை. சட்டத்தின் ஆட்சி இங்கு சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**இந்த ஊரடங்கை மீறியமைக்காகப் பல்லாயிரம் பேர் கைது செய்யப்பட்டு விட்டனர். பல்லாயிரம் வாகனங்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. பல நூறு பேர் நீதிமன்றங்களினால் தண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அபராதத் தொகைகளையும், தண்டக் கட்டணங்களையும் செலுத்தி வெளியே வந்துள்ளனர்.**

**இது குறித்து சட்ட மேதைகளைக் கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டால், அது ஆற அமர இருந்து, சாவகாசமாக அரசுக்கு ஒரு பரிந்துரைக் கடிதத்தை சமர்ப்பித்திருக்கின்றது.**

**அதில் கூட, நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் முறையானதல்ல, சட்ட ரீதியாக அது பிறப்பிக்கப்படவில்லை, சட்டத்தின் ஆட்சி இவ்விடயத்தில் நிலவவில்லை என்று அறுத்து, உறுத்து, வெளிப்படையாகக் கூறப்படவில்லை. அப்படிக் கூறும் திராணி ஆணைக்குழுவுக்கு இல்லைப் போலும்.**

**நாள் கணக்கு, வாரக் கணக்குகளைத் தாண்டி ஊரடங்கு நீடிக்கப்பட்ட காலத்தில் எல்லாம், இதில் உள்ள சட்டப்பிரச்சினை குறித்து அரசுக்கு இடித்துரைத்துச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டிய மனித உரிமைகள் ஆணைக்குழு, இவ்வளவு காலமும் தூங்கி விட்டு, இப்போதுதான் நித்திரையால் எழும்பியது போல, ஊரடங்குச் சட்டம் ஆக இரவில் 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை என்று சுருங்கிப்போன கட்டத்தில் அரசுக்கு அதன் தவறைப் பட்டுப்படாமலும் பரிந்துரைப்பதன் மூலம் சமாளிக்க வருகின்றது.**

**'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' – என்பார்கள். அதுபோல 'தாமதிக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்' என்பதும் இன்னொரு நீதிவாசகம்.**

**இவை இரண்டையும் இலங்கை மனித உரிமைகள் ஆணையம் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். அப்போதுதான் அதன் மீது மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும்.**

## தேர்தல் முடிவு.............

மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வாக்களிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்த அடுத்த தினமான ஒகஸ்ட் 6ஆம் திகதி காலை முதல் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

அன்றைய தினம் இரவு வேளைக்குள் நாட்டை ஆளப்போகும் கட்சி அல்லது சுயேச்சைக்குழு எது என்பது தொடர்பில் உறுதியாக அறிந்துகொள்ள முடியும் என அவர் நம்பிக்கை வெளியிடுகின்றார்.

விருப்பு வாக்குகளைக் கணக்கெடுத்து நிறைவு செய்ய இரண்டு தினங்கள் எடுக்கும் என மஹிந்த தேசப்பிரிய கூறுகின்றார்.

வாக்கெண்ணும் அதிகாரிகளுக்கு இடையில் சமூக இடைவெளியை பேணுதல், சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுதல் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டே வாக்கெண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

## சிறுபான்மையின............

வெளியிட்டு வைக்கப்பட்ட 2019ஆம் ஆண்டுக்கான சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இலங்கை அரசு சிறுபான்மையின மக்கள் மீதான திட்டமிடப்பட்ட பாகுபாட்டைக் காண்பிப்பதாகச் சிறுபான்மையின மதக் குழுக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

சிறுபான்மையின மக்கள் மீது மத ரீதியாக முடுக்கிவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அரச அதிகாரிகளோ அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்களோ பெருமளவில் அல்லது முழுமையாகவோ அக்கறை செலுத்தவில்லை.

சிறுபான்மையினத்தவர் மற்றும் அவர்களது மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களைத் தடுப்பதற்கு மேற்படி இரு தரப்புக்களும் முயலவில்லை என்றும் சிவில் சமூக அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன என அமெரிக்காவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இரு வேறு.............

கடைபிடிக்கின்றனர் எனவும், வேறு சிலருக்கு வேறுவிதமான கொள் கையை பின்பற்றுக்கின்றனர் எனவும் கருத்து நாட்டில் உருவாகி இருப்பதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

முன்னிலை சோசலிசக் கட்சியினரின் ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் நடந்துகொண்ட விதம் மற்றும் முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிச் சடங்கில் செயற்பட்ட விதம் காரணமாக நாட்டு மக்கள் மத்தியில் இந்தக் கருத்து ஏற்பட்டுள்ளது எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், பொலிஸ் மா அதிபரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சின் போதே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இதனை கூறியுள்ளார் எனத் தெரியவருகிறது.

## ஐ.தே.கவுடன்.............

அவருடைய இந்தத் தனிப்பட்ட தீர்மானத்துக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். அதேவேளை, தேர்தலில் போட்டியிடாவிட்டாலும், அரசியலில் தொடர்ந்தும் எமது கட்சியுடன் இணைந்து பயணிக்கவேண்டும் என்று மங்களவிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

பொதுத்தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி புதிய உத்வேகம் பெற்றுள்ளது. கட்சி அலுவலகத்தின் வளாகத்தில் கடந்த மார்ச் 19 ஆம் திகதி காணப்பட்ட நிலை தற்போது இல்லை. கட்சியின் ஆதரவாளர்கள் நிறைந்திருக்கின்றார்கள்.

பாரம்பரியம் மிக்க ஐக்கிய தேசியக் கட்சி அழிந்து இல்லாமற்போவதற்கு இடமளிக்க முடியாது என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கின்றார்கள். கடந்த காலங்களில் நாட்டில் பெருமளவான அபிவிருத்தியை ஏற்படுத்தியதும், மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கியதும் ஐக்கிய தேசியக் கட்சி என்பதை மக்கள் புரிந்துவைத்திருக்கிறார்கள் – என்றார். அதனைத் தொடர்ந்து மங்கள சமரவீரவின் அரசியல் ஓய்வு தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் –

மங்கள சமரவீர அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வுபெறப்போவதாகத் தெரிவிக்கவில்லை. அவர் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றே கூறியிருக்கின்றார். அவருடைய இந்தத் தனிப்பட்ட தீர்மானத்துக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். எனினும், அவர் ஒரு சிறந்த புத்திஜீவி என்பதுடன், குறிப்பாக ஜனநாயகத்தை மேம்படுத்துவதை முன்நிறுத்திய கருத்துக்களை வெளிப்படையாகவே தெரிவித்து வந்திருக்கின்றார். அது மாத்திரமன்றி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து நீண்டகாலம் மக்களுக்காக முன்நின்று செயற்பட்டிருக்கின்றார்.

அவர் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும், அரசியலில் தொடர்ந்தும் எமது கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரை தற்போது தொலைபேசி மணி ஒலிப்பது நின்றுவிட்டது போல் தெரிகின்றது. பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் கையெழுத்திட்ட சிலர் தற்போது அதிலிருந்து விலகியிருக்கின்றனர் என அறியமுடிகின்றது.

ஆனால், எமது கட்சியில் அத்தகைய நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய விரும்புபவர்களுக்கு உறுப்புரிமையை வழங்காமலிருக்க வேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை. கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்புடையவர்களாகவும், எந்தவொரு குற்றச்செயல்கள் மற்றும் மோடிகளிலும் தொடர்புபடாதவர்களாகவும் இருப்பின் அவர்களைக் கட்சியில் இணைத்துக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம் – என்றார்.

## பொலிஸாரின்.............

முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைத்து சுகாதார வழிமுறைகளையும் பின்பற்றினார்கள் எனத் தெரிவித்துள்ள அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொட, பொலிஸாரே கொரோனா சட்டங்களை மீறி செயற்பட்டார்கள் எனவும், தம்மீது தாக்குதலை மேற்கொண்டார்கள் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் அனைவரையும் தனிமைப்படுத்துமாறு அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது என்ற அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தனவின் கருத்துக்கும் அவர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஒரு நபர் அல்லது குழுவைத் தனிமைப்படுத்த வேண்டுமா என்பதை சுகாதார அதிகாரிகளே தீர்மானிக்க வேண்டும்; ஜனாதிபதியோ அல்லது அமைச்சரவையோ இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை ஒடுக்குமுறைக்கான சாதனமாகப் பொலிஸாரும் அரச தரப்பினரும் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர் சாடியுள்ளார்.

பொலிஸார் செயற்பட்ட விதத்துக்கு எதிராக அனைத்து சட்டவழிமுறைகளையும் பயன்படுத்தப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நல்லாட்சியா?.............

வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–


ராஜபக்ஷக்களின் ஆட்சி என்றால் படுகொலைகள் நிறைந்த ஆட்சி என்று எல்லோருக்கும் தெரியும். பொதுத்தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரும்கூட நாட்டில் படுகொலைகள் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் அரங்கேறுகின்றன.

எனவே, நல்லாட்சி வேண்டுமா? அல்லது படுகொலையாட்சி வேண்டுமா? என்பதை ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தீர்மானிக்க வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தை நாட்டு மக்கள் தவறவிடக் கூடாது.

அனைத்து வாக்காளர்களும் ஓகஸ்ட் 5ஆம் திகதி தமது ஜனநாயக உரிமையை நிறைவேற்ற வேண்டும்.

தற்போதைய நிலைமையில் நல்லாட்சியைத்தான் பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர் – என்றார்.








*2117ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்தில் ஐக்கிய அரபு இராச்சியம் சார்பில் முதல் நகரம் கட்டமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. அமைக்கப்பட உள்ள கட்டட அமைப்புகளை முன் னோட்டமாகத் துபாய் நகரத்தில் மாதிரிச் செவ்வாய் கிரக நகரம் உருவாக்கப்படுகிறது. ஹோப் விண்கலம் ஏவப்பட்ட பிறகு அடுத்த திட்டமாக இது செயற்படுத்தப்பட உள்ளது.*

# குருதி வகைக்கு ஏற்ப கொரோனாத் தாக்கம்

கொரோனா வைரசின் தாக்கம் குறித்து உலகம் முழுவதும் பல்வேறு மருத்துவ வல்லுநர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு ஆய்விலும் புதுப் புதுத் தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளன.

கொரோனா வைரசால் பாதிக் கப்பட்ட சிலர் மட்டும் ஏன் கடுமையாக நோய் வாய்ப்பட்டு இறக்கிறார்கள்? மற்றவர்களுக்கு ஏன் குறைவான அறிகுறி உள்ளது? சிலர் ஏன் அறிகுறி இல்லாமல் இருக்கிறார்கள்? ஆகியவற்றுக்கு அவரவர் குருதி வகைகளே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.




வைரசால் பாதிக்கப்படுவதற்குக் குருதி வகை முக்கிய பங்கு வகிக்கக்கூடும் என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஓ வகை குருதி (ஓ பொசிட்டிவ் மற்றும் ஓ நெகட்டிவ்) உள்ளவர்கள் கொரோனா வைரசிடம் இருந்து பாதுகாப்பாக உள்ளனர்.

இந்த நபர்களுக்கு பாதிப்பு 9 – 18 சதவீதம் குறைவாக உள்ளது. ஏ வகை குருதி உள்ளவர்களை கொரோனா தாக்கினால் கடுமையான சிக்கல்களைச் சந்திப்பதுடன், உயிருக்கும் ஆபத்து நேரிடலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஏ பொசிட்டிவ், ஏ நெகட்டிவ், ஏபி பொசிட்டிவ் மற்றும் ஏபி நெகட்டிவ் ஆகிய குருதிவகை உள்ளவர்களுக்கு கொரோனா வைரசால் ஏற்படும் ஆபத்து அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா சிகிச்சை மையங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் இருந்து இது தெரியவந்துள்ளது.

# தலிபான்களுடன் பேசுவதற்குத் தயார் ஆப்கானிஸ்தான் அதிபர் தெரிவிப்பு



தலிபான்களுடன் மீண்டும் பேச்சுகளை நடத்துவதற்கு ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானி சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதைக் கட்டார் வெளியுறவுத் துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியது. இதுகுறித்துக் கட்டார் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்ததாவது:–

கட்டாரில் தலிபான்களுடன் நடக்கும் பேச்சுக்கு ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானி சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் ஆப்கனில் அமைதி ஏற்படுவதற்குக் கட்டார் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆப்கானிஸ்தான் அதிபர் பாராட்டுத் தெரிவித்தார் என்றது.

அஷ்ரப் கானியின் இந்தச் சம்மதத்ததைத் தொடர்ந்து டோஹாவில் தலிபான்களுடனான அமைதிப் பேச்சு விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவ வேண்டி, அமெரிக்கா – தலிபான்களுக்கு இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க சமாதான உடன்படிக்கை டோஹாவில் கையொப்பமானதும், ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடனான போரை முடிவுக்குக் கொண்டுவர அவர்களது நிபந்தனைகளை ஏற்பதாக அண்மையில் அதிபர் அஷ்ரப் கானி தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து 900 தலிபான்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்ப்பின் தடைக்கு ஐ.நா.சபை கவலை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள், ஊழியர்களுக்கு விதித்த தடையானது, நடைபெற்று வரும் விசாரணைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அலுவலகம் கவலை வெளியிட்டது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் போர்க்குற்றங்களைச் செய்தனவா என்பது குறித்த விசாரணையில் ஈடுபட்டுள்ள ஹேக் சார்ந்த தீர்ப்பாயத்தின் ஊழியர்களுக்கு எதிராக ட்ரம்ப் பொருளாதார மற்றும் பயணத் தடைகளை விதித்துள்ளார்.

இந்த நிலையில் இதுகுறித்துக் குறிப்பிட்ட மனித உரிமை அலுவலகம், சுதந்திரம் மற்றும் குறுக்கீடு இல்லாமல் செயற்படுவதற்கான நீதிமன்றத்தின் திறனை உறுதிப்படுத்த வேண்டும், எந்தவொரு முறையற்ற செல்வாக்கு, தூண்டுதல், அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், குறுக்கீடுகள், நேரடியான அல்லது மறைமுகமாக இருப்பது விரும்பத்தகாதது என்றுள்ளது ஐ.நா.

# மிரட்டல்களுக்கு அடிபணியோம் சீனாவுக்கு ஆஸி. பிரதமர் பதிலடி



ஏற்றுமதிக்குத் தடை விதிக்கும் சீனாவின் மிரட்டல்களுக்கெல்லாம் அடிபணியமாட்டோம் என்று ஆஸ்திரேலியாப் பிரதமர் ஸ்கொட் மோரிசன் பதிலடி கொடுத்துள்ளார்.

கெரோனா தொற்று விவகாரத்தில் சீனா அலட்சியமாகச் செயல்பட்டதால் இன்று உலகம் முழுதும் கொரோனா பல நாடுகளின் பொருளாதாரம், சுகாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது என்று ஆஸ்திரேலியா குற்றம் சாட்டியதோடு இது தொடர்பான அமெரிக்க விசாரணைக்கும் ஆதரவு அளித்து சீனாவை பகைத்துக் கொண்டது.

ஆஸ்திரேலியா சீனா இடையே ஆண்டுக்கு ரூ.18 லட்சம் கோடி அளவுக்கு வர்த்தகம் நடைபெற்று வருகிறது. ஆஸ்திரேலியாவின் நிலைப்பாட்டால் ஆஸி.யிலிருந்து மாட்டிறைச்சிக்குத் தடை விதித்தது. பார்லி இறக்குமதிக்கு அதிக கட்டணம் அறவிட்டது.

சீன சுற்றுலாப் பயணிகளும் ஆஸ்திரேலியாவைத் தவிர்க்க வேண்டும் என்று சீனா அறிவுறுத்தியது. இந்த நிலையில் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மோரிசனிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, நாங்கள் வெளிப்படையாக வர்த்தகம் மேற்கொள்ளும் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவே தேவையற்ற மிரட்டல்களுக்கெல்லாம் அடிபணியமாட்டோம். எங்கள் மதிப்புகளை நாங்கள் விற்கத் தயாராக இல்லை என்றார்.



# காபூல் மசூதியில் குண்டுவெடிப்பு 4 பேர் சாவு – பலருக்குக் காயம்

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரிலுள்ள மசூதி ஒன்றில் வெள்ளிக்கிழமை தொழுகையின் போது ஏற்பட்ட குண்டுவெடிப்பில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

பலர் காயமடைந்தனர். ஆப்கானிஸ்தானின் உள்துறை அமைச்சகம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியது.

மசூதிக்குள் வைக்கப்பட்டிருந்த வெடி பொருள்கள் வெள்ளிக்கிழமை தொழு கையின் போது வெடித்தன என்று உள்துறை அமைச்சக அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் பொறுப்பேற்கவில்லை. ஆப்கானிஸ்தான் அரசுக்கும் ஆயுததாரிகளான தலிபான்களுக்கும் இடையில் 18 ஆண்டுகாலமாக நீடிக்கின்ற போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்குச் சமாதான முயற்சிகள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா, அமெரிக்கா நாட்டவரின் உயிரணுக்களில் சகிப்புத்தன்மை

## கண்டுபிடித்தார் ராகுல் காந்தி



இந்தியாவும் அமெரிக்காவும் தங்கள் டி.என்.ஏக்களில் சகிப்புத்தன்மையைக் கொண்டுள்ளன, ஆனால் சமீபத்தில் அது மறைந்துவிட்டது என்று ராகுல் காந்தி கூறி உள்ளார்.

கொரோனா வைரஸ் நெருக்கடி உலக ஒழுங்கை எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பது குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி அமெரிக்க முன்னாள் தூதர் நிக்கோலஸ் பர்ன்ஸ் உடன் உரையாடினார். அதன் போதே ராகுல் காந்தி இவ்வாறு தெரிவித்தர்.

இதுகுறித்து ராகுல்காந்தி மேலும் கூறியதாவது:-

ஒருதலைப்பட்சமாக முடிவுகளை எடுக்கும் அரசாங்கம் எங்களிடம் உள்ளது. அது ஒரு கடினமான ஊரடங்கை விதிக்க முடிவுசெய்தது, அதன் விளைவாக ஏற்பட்ட முடிவை அனைவரும் பார்க்க முடிந்தது.

ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றார்கள். நாங்கள் அதை எதிர்த்துப் போராடுகிறோம். எனது நாட்டின் டி.என்.ஏவைப் புரிந்துகொள்வதால் நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, எனது நாட்டின் டி.என்.ஏ ஒரு வகையானது, அதை மாற்ற முடியாது என்பதை நான் அறிவேன். இந்தியாவும் அமெரிக்காவும் தங்கள் டி.என்.ஏவில் சகிப்புத்தன்மையைக் கொண்டுள்ளன, ஆனால் சமீபத்தில் அது மறைந்துவிட்டது எனக் கூறினார்.

# சீன ஆதரவு கணக்குகள் 1 இலட்சம் நீக்கப்பட்டன

## டுவிட்டர் அதிரடி

சீனாவுக்கு ஆதரவாக கருத்துக்களை பரப்பும் வகையில் இயங்கி வந்த 1 லட்சத்து 70 ஆயிரம் கணக் குகளை டுவிட்டர் நிறுவனம் அதிரடியாக நீக்கியுள்ளது.

சீனாவில் சமூக வலைதளமான டுவிட்டர் அதிகாரபூர்வமாக தடை செய்யப்பட்டிருந்தாலும், வி.பி.என். மூலம் பலரும் டுவிட்டரை பயன்படுத்தி வருகின்றனர். சீன ஆதரவு பிரசாரத்தின் நோக்கமானது, வெளிநாடுகளில் உள்ள சீனாவை சேர்ந்தவர்களின் திறனை பயன்படுத்தி கட்சியின் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான முயற்சி என டுவிட்டருடன் இணைந்து பணியாற்றிய ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

முக்கியமாக இந்த கணக்குகள் அனைத்தும் சீன மொழிகளில் மட்டும் டுவீட் செய்வதாகவும் டுவிட்டர் நிறுவனம் கூறியுள்ளது. சி.என்.என். தகவலின்படி, டுவிட்டர் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றிய நிபுணர்கள் கூறுகையில், சீன ஆதரவு கணக்குகள், ஹாங்காங் போராட்டம், கொரோனா தொற்று மற்றும் மற்றவை குறித்து போலியான செய்திகளை பரப்பி வந்துள்ளன.

“இந்த கணக்குகள் பல ஜனவரி மாதத்தில் தொடங்கப்பட்டன. மேலும் கொரோனா தொற்று பற்றி பதிவுகளை இடுவதில் ஈடுபட்டுள்ளன. கொரோனா தொற்றை ஒழிக்க சீனா பாடுபடுவதாக பாராட்டு தெரிவித்தும், ஹாங்காங் போராட்டக்காரர்கள் மற்றும் அமெரிக்காவை விரோதிகளாக சித்தரித்தும் டுவீட்களை பதிவு செய்துள்ளன” என்றார் ஸ்டான்போர்டு இணைய ஆய்வகத்தின் ஆராய்ச்சி மேலாளர் ரெனீ டிரெஸ்டா.

## இந்திய – நேபாள எல்லையில் பதற்றம் துப்பாக்கி சூட்டில் பெண் ஒருவர் சாவு

இந்திய – நேபாள எல்லையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இந்தியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் சாவடைந்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டு உள்ளது. பீகார் மாநிலத்தில் இந்திய – நேபாள எல்லையில் ஒட்டியுள்ள சிதாமர்ஹி எனும் இடத்தில் இந்தத் துப்பாக்கி சூட்டுச் சம்பவம் நடந்தது. இதில் 2 பேர் காயம் அடைந்தனர்.

நேபாளப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலே இந்தப் பெண் கொல்லப்பட்டு இரண்டு பேர் காயமடைந்தனர் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவின் எல்லைப் புறப் பொலிஸார் இதுகுறித்துக்கூறுகையில் –

இந்தச் சம்பவம் உள்ளூர் மக்களுக்கும் நேபாளத்தின் பொலிஸாருக்கும் இடையே நடந்தது என்றனர். எல்லைக்கு அருகிலுள்ள பகுதியை அணுகுவது தொடர்பாக உள்ளூர்வாசிகள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதாகவும், இதனால் இரண்டு தரப்புகளுக்கும் இடையே துப்பாக்கிச் சூடு நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# உக்ரைன் நாட்டு அதிபரின் மனைவிக்குக் கொரோனா



உக்ரைன் அதிபரின் மனைவி ஒலேனா ஜெலன்ஸ்கா கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் நட்டின் அதிபராக இருப்பவர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி. இவரது மனைவி கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று மருத்துவச் சோதனைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

அவர் பாதிக்கப்பட்டுளளபோதும் அதிபரான கணவர் மற்றும் அவர்களது குழந்தைகள் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை என்பதை ஒலேனா ஜெலன்ஸ்கா இன்ஸ்டாகிராமில் தெரிவித்துள்ளார். தான் தற்போது நன்றாக இருக்கிறார் என உணர்கிறார் எனவும், வெளி நோயாளியாக சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும், குடும்பத்தில் இருந்து விலகி இருக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் இதுவரை 29 ஆயிரம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 870 பேர் உயிரிழந்துள்ளனர். மே மாதக் கடைசியில் இருந்து உக்ரைன் முடக்கத்தைப் படிப்படியாக தளர்த்தி வருகிறது.


## உடனடி வேலைவாய்ப்பு

காலைக்கதிர் பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

- பத்திரிகை விநியோகத்தர்
- விளம்பரம் சேகரிப்பவர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
- பிரதேச செய்தியாளர்கள்
- அலுவலக செய்தியாளர்கள்

சனி (13/06/2020) மற்றும் ஞாயிறு (14/06/2020) ஆகிய தினங்களில் நேரில் சமூகமளிக்கவும்.

Green Media House (pvt) Ltd
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
(இந்துக்கல்லூரி மைதானத்திற்கு எதிரில்)
076 443 8623


# சர்வதேசக் கொரோனாப் பாதிப்பு 76 லட்சத்தையும் தாண்டி உயர்வு



நாளுக்கு நாள் உலகின் பல் வேறு நாடுகளிலும் கொரோனா தொற்று பாதித்தோரின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் பதிவாகி வருகிறது.

இதனால கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 76 லட்சத்தை தாண்டியுள்ளது. இதேபோல் உலகம் முழுவதும் கொரோனாவுக்கு பலியானோரின் எண்ணிக்கையும் 4 லட்சத்து 20 ஆயிரத்தை கடந்துள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு 33 லட்சத்து 36 ஆயிரம் பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நிலையில், 38 லட்சத்து 52 ஆயிரம் பேர் இதுவரை குணமாகியுள்ளனர்.

உலக அளவில் அதிகம் பாதிக்கப்பட்ட நாடான அமெரிக்காவில் அத்தொற்று பாதித்தோரின் எண்ணிக்கை 20 லட்சத்தையும், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1 லட்சத்து 15 ஆயிரத்தையும் கடந்துள்ளது. இதேபோல் பிற நாடுகளிலும் கொரோனா பரவல் கணிசமாக அதிகரித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து இங்கிலாந்து (41,364), பிரேசில் (40,919), இத்தாலி (34,167) என ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. மீட்டெடுப்பின் மிக உயர்ந்த விகிதம் அமெரிக்காவிலிருந்து (5,38,645) பதிவாகியுள்ளது.

பல அமெரிக்க மாநிலங்கள் ஊரடங்கு விதிகளை தளர்த்தியுள்ளன, அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் இன்று முதல் ஊரடங்கை தளர்த்துகிறது.

# சமஷ்டியே தீர்வு

## ஹூலும் உறுதி

“கெட்டவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம், உயிருக்கு ஆபத்து ஏற்படின் நாட்டை விட்டு செல்வேன், தமிழர்களுக்கு சமஷ்டியே தீர்வு, ஆயுத கலாசாரத்தை ஆதரிக்க மாட்டேன் இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இணையத் தளமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் மேற்கண்ட விடயங்களை கூறினார்.

அவர் வழங்கிய செவ்வியின் முழுவடிவம் வருமாறு:-

**கே :** ஹூல் என்பவர் யார்? உங்கள் கொள்கைகள் என்ன?

**ஹூல் :** யாழ்ப்பாணத்தை பூர்விகமாக கொண்டு வசிக்கின்றேன். நான் ஒரு சிரேஷ்ட பேராசிரியர். பேராதனை பல்கலைக்கழகத்திலும் பல்வேறு வெளிநாடுகளிலும் பேராசிரியராக கடமையாற்றியுள்ளேன். எனது தந்தை ஒரு அங்கிலிக்கன் பாதிரியார், என் அம்மா ஒரு கணித விரிவுரையாளர். ஐந்து சகோதரர்களோடும் ஒரு சகோதரியுடன் பிறந்தவன் நான். இதுவே எனது சுருக்கமான அறிமுகம்.

**கே :** தற்போது தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் ஆணைக்குழுவுக்குள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகள் எவை?

**ஹூல் :** இரண்டு பொறுப்புகள் உள்ளன. அதில் ஒன்று தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பது மற்றயது வாக்காளர்களுக்கு கொவிட் 19 தொற்று ஏற்படாமல் நடத்துவதாகும். இதற்கான ஒழுங்குகளை செய்து வருகின்றோம். அந்த பணிகள் ஒகஸ்ட் 5 ஆம் திகதி மட்டும் தொடரும்.

**கே :** ஆணைக்குழுவில் சுயாதீனமாகவா முடிவுகள் எடுக்கப்படுகின்றன?

**ஹூல் :** ஆம் சுயாதீனமாகவே எடுக்கப்படுகின்றன. ஆணைக்குழுவில் இருக்கும் நாம் மூவரும் சுயாதீனமாக இயங்குபவர்கள். அனேகமான முடிவுகளில் மூவரும் ஒத்துப் போகின்றோம். மூவரும் இணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்கும் போது அது சரியானதாகவே அமையும்.

**கே :** ஆனால் சில நேரங்களில் நீங்கள் சொல்லும் கருத்துகள் ஆணைக்குழுவின் தலைவரால் விமர்சிக்கப்படுகின்றனவே. இதற்கு என்ன காரணம்?

**ஹூல் :** அவர் எனது சுயாதீனமான கருத்துக்களை அங்கீகரிப்பதாகவே சொல்லுகின்றார். அவர் எனது கருத்துக்களோடு உடன்படாவிட்டாலும் அவற்றை அங்கீகரிக்கின்றார்.

அதாவது எனக்குள்ள உரிமையை அவர் அங்கீகரிக்கின்றார். அண்மையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட போது அவருடன் நான் வித்தியாசப்பட்டேனே தவிர முரண்படவில்லை. அதாவது அரசாங்கத்தால் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது

> “நான் எழுதிய புத்தகம் ஒன்று புலிகளுக்கு பிடிக்கவில்லை. 2006 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் அந்த புத்தகத்தை காரணம் காட்டி எனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதனால் எனது துணைவேந்தர் பதவிக்காலத்தை முடிக்க முன்னர் நாட்டைவிட்டு ஓடவேண்டி ஏற்பட்டது. இப்படியிருக்கும் போது நான் எவ்வாறு புலிகளை ஆதரிப்பது?”

பிழை என்றாலும் அரசாங்கத்தால் தேர்தலை வைக்குமாறு கட்டளை வரும் போது அதனை செய்ய வேண்டியது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டது. அதை நான் ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டாலும் அதன் பின்னர் அரசாங்கத்தால் பிழையான கட்டளை வரும் போது அதற்கு கீழ்ப்படிவது பிழை என தெரிவித்து நான் நீதிமன்றத்தை நாடினேன். அதனை முரண்பாடு என்று கூற முடியாது. மாறாக கருத்து வித்தியாசம் அவ்வளவுதான்.

நாம் ஒன்றாகவே தொடர்ந்து பயணிக்கின்றோம். இது வெறுமனே ஆணைக்குழுவின் மதிப்பைக் குறைக்க முன்னெடுக்கப்படும் பிரசாரம். தேர்தல் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு அவ்வாறானவர்களுக்கு தடையாக உள்ளது.

எனவே எமக்குள் முரண்பாடுகள் காணப்படுவதாக அவர்கள் பொய்ப்பிரச்சாரம் செய்கின்றனர் ஆணைக்குழுவில் முரண்பாடுகள் இல்லை.

**கே:** நீங்கள் விடுதலைப்புலிகளுக்கு சார்பானவரா?

**ஹூல் :** (சிரித்தவாறு) என்னைப்பற்றி தெரிந்தவர்களுக்கு உண்மை விளங்கும். மத்தியிலிருந்து ஒரு அதிகார பரவலாக்கலே அவசியம். அவ்வாறாறு செய்தால் மட்டுமே இலங்கை நல்ல நாடாக மாறும் என்பது எனது உறுதியான நம்பிக்கை. ஆனால் ஆயுதம் தாங்கி போர் புரிவதை நான் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள போவதில்லை. அவ்வாறு செயற்படுபவர்களையும் ஆதரிக்கப் போவதில்லை.

நான் எழுதிய புத்தகம் ஒன்று புலிகளுக்கு பிடிக்கவில்லை. 2006 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் அந்த புத்தகத்தை காரணம் காட்டி எனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதனால் எனது துணைவேந்தர் பதவிக்காலத்தை முடிக்க முன்னர் நாட்டைவிட்டு ஓடவேண்டி ஏற்பட்டது. இப்படியிருக்கும் போது நான் எவ்வாறு புலிகளை ஆதரிப்பது?

சிலோன் டுடே என்ற பத்திரிகையில் நான் நைஜிரியாவில் இருக்கும் போது புலிகள் அமைப்புக்கு நிதி சேர்த்ததாக தெரிவிக்கப்பட்டது. நான் நைஜிரியாவில் 77 முதல் 80 வரையான காலப்பகுதியிலேயே இருந்தேன். அப்போது புலிகள் அமைப்பு பெரிய ஒரு இயக்கமாக இருக்கவில்லை. ஆகவே நான் புலிகளுக்கு நிதி சேகரித்தேன் என கூறுவது வம்புத்தனம். என் பெயரை கெடுக்க அப்படி சொல்லப்படுகின்றது.

குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் பெயரை கெடுப்பதே இவ்வாறானவர்களின் வேலை. எனக்கும் புலிகளுக்கும் வெகு தூரம் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

**கே :** தமிழ் தேசிய கூட்டமைப்பு சமஷ்டியைக் கோரி வருகின்றது ஆகவே சமஷ்டி கொடுக்கப்பட்டால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என கருதுகின்றீர்களா?

**ஹூல்:** சமஷ்டியே எனது நம்பிக்கை. சமஷ்டி வெறுமனே தமிழர்களின் ஒரு கோரிக்கையல்ல. மாறாக அது ஜே.ஆர்.ஜெயவர்தன, பண்டாரநாயக்க போன்றோரினது நிலைப்பாடாகவும் இருந்தது. ஆகவே அது நாட்டுக்கு எதிரான காரியம் அல்ல. இப்போது ஏன் சமஷ்டிக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது என எனக்கு தெரியவில்லை.

**கே :** ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சி உங்களுக்கு எதிராக தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றதே. இதற்கு உங்களின் பதில் என்ன?

**ஹூல்:** அவர்கள் தேர்தல் விதிகளை மீறுகின்றனர். ஆணைக்குழுவில் உள்ள நாங்கள் அதை சுட்டிக் காட்டும் போது அது அவர்களுக்கு பிடிக்கவில்லை. அதற்கு எதிரான அவர்கள் எம்மை மிரட்டுகின்றனர் தங்களின் குற்றங்களை தடையில்லாமல் செய்வதற்காகவே அவ்வாறு மிரட்டுகின்றனர். தேர்தலை சரியாக நடத்த வேண்டுமாயின் எந்தவொரு கட்சியும் தமது தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரச சொத்துக்களை பயன்படுத்த முடியாது.

யாழ்ப்பாணத்தில் குறித்த ஒரு கட்சி சார்பில் பதாகை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வைத்தது மாத்திரமல்லாது அரச செலவில் தங்களது தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள முயன்றனர். அதனை நான் அல்ல ஆணைக்குழுவே நிறுத்தியது. ஆணைக்குழு அவ்வாறு செய்ததை நான் செய்தாக எண்ணி அவர்கள் என் மீது கோபப்பட்டு வருகின்றனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு அங்கு அலுவலகம் ஒன்று இருந்ததாகவும் அதை நீக்காமல் அவர்களின் பதாகையை மாத்திரம் நீக்கினர் என கூறி வருகின்றனர். அவர்கள் கூறுவது போல் அங்கு கூட்டமைப்பின் அலுவலகம் இருக்கவில்லை. மற்றையது கூட்டமைப்பு அரசாங்க செலவில் பிரசாரங்களை முன்னெடுக்கவில்லை. ஆனால் அந்த குறித்த கட்சி மக்களின் பணத்தை திருடி பிரசாரம் செய்ய ஆரம்பித்தது.

ஆகவே அவ்வாறான அவர்களின் செயற்பாட்டை ஆணைக்குழு நிறுத்தியமை நல்ல விடயம்.

**கே :** நீங்கள் ஒரு இனவாதி என்று சொல்லப்படுகின்றத. இதற்கு உங்களின் பதில் என்ன?

**ஹூல் :** இல்லை. என்னைபற்றி தெரிந்தவர்களுக்கு நன்றாக தெரியும். என் வாழ்க்கை சகல சமூகங்களையும் இணைத்தே இயங்குகின்றது. கிறிஸ்தவன் என்ற வகையிலும் ஏனைய சமூகங்களோடு நன்றாய் பழகுபவன் என்ற முறையிலும்



மற்றைய சமூகங்களை தூசிப்பது எனது குணம் அல்ல.

ஒடுங்கிய ஒரு சமூகத்தில் வாழ்வர்கள் மாத்திரமே தாங்களே பெரிய ஆட்கள் என கருதி இவ்வாறு செயற்படுகின்றனர். அது வெறும் முட்டாள் தனம்மட்டுமல்ல. முற்று முழுதான துவேசம். அப்படியானவர்களுக்கு சிங்கள மக்கள் வாக்களிக்கக்கூடாது.

மார்ச் 12 அமைப்பின் கொள்கைகயை நான் பின்பற்றுபவன் என்ற வகையில் கெட்டவர்களுக்கு வாக்களிக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என நான் சொல்லவில்லை. கெட்டவர்கள் எல்லா கட்சிகளிலும் இருக்கிறாா்கள். அதேபோல் நல்வர்களும் எல்லா கட்சிகளிலும் இருக்கின்றனர். அவர்களை இனங்கண்டு அவர்களுக்கு வாக்களியுங்கள்.

**கே:** நீங்கள் ஒரு இரட்டை குடியுரிமையை கொண்டவர் அப்படியிருக்கையில் சிலரின் குற்றச்சாட்டுகளுக்கு பயந்து நாட்டை விட்டு வெளியேறும் எண்ணம் உள்ளதா?

**ஹூல்:** வேறு வழியில்லாமல் 2005 ஆம் ஆண்டு வெளிநாடு சென்று மீண்டும் 2010 ஆம் ஆண்டு நாடு திரும்பி இருந்தேன். ஆனால் மறுபடியும் ஏற்பட்ட பிரச்சினைகளால் வெளிநாட்டுக்கு ஓடி இப்போது நாடு திரும்பி வாழ்கின்றேன். இலங்கையிலேயே எனது வாழ்க்கையை அமைத்திருக்கின்றேன். ஆனால் மறுபடியும் உயிருக்கு ஆபத்து ஏற்படுமாக இருந்தால் வெளிநாட்டுக்கு செல்ல வேண்டியதுதான். ஆனால் இனியும் வெளிநாடு செல்வது எனது நோக்கமல்ல. இலங்கையில் சகலரும் ஒற்றுமையாய் வாழ்வதே எனது அவா.

**கே :** ஹூல் நாட்டு மக்களிடம் கூற விரும்புவது என்ன?

**ஹூல் :** ஜனநாயம் என்பது மக்களின் உரிமை எனவே சரியானவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு வாக்களிக்குமாறே நான் கேட்டுக்கொள்கின்றேன். நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அறிந்து வாக்களியுங்கள் எனத் தெரிவித்தார்.

# சிறுவர் உரிமை தொடர்பாக வவுனியாவில் விழிப்புணர்வு



வவுனியா, ஜூன் 12

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின்சங்கத்தின்ஏற்பாட்டில்சிறுவர்களைப் பாதுகாப்போம் எனும் தொணிப் பொருளில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

முன்னதாக முற்பகல் 11 மணியவில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊர்வலமாக சென்ற பெண்கள், மன்னார் வீதி வழியாக பூங்கா வீதியை அடைந்து, பழைய பஸ் நிலையம் வரை சென்றிருந்ததுடன், சிறுவர் உரிமைகளை வலுப்படுத்தும் விதமான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததுடன், வாகனங்களிலும் காட்சிப்படுத்தியிருந்தனர்.

### வடமாகாண கல்வி விடயத்தில்

# எம்மிடம் பிழையை வைத்துக்கொண்டு மத்திய அரசை குறைசொல்லக்கூடாது

## ஆளுநர் சாள்ஸ் வவுனியாவில் தெரிவிப்பு





வடக்கு மாகாணக் கல்வியை முன்னேற்றுவதற்கு எம்மில் பிழைகளை வைத்துக்கொண்டு மத்தியைக் குறைகூற முடியாது. முதலில் பிரச்சினை என்ன, தீர்வு என்னஎன்பதைஇங்குள்ளகல்வியாளர்கள்கூறினால்தான் நான் அரசிடம் சென்று தேவையானவற்றைக் கேட்டுப் பெறமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.சாள்ஸ்.

வடமாகாண ஆளுனர் தலைமையில் வவுனியா மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வவுனியா நகரசபை கலாசாரமண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

அண்மையில் வெளியாகிய க.பொ.சாதரண தரப் பரீட்சைப் பெறுபேற்றில் வவுனியா மாவட்டம் 21ஆவது நிலையைப் பெற்றுள்ளது. இந்நிலையில் வவுனியா மாவட்டம் கல்வி தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் கல்வி அபிவிருத்திக்கு முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள்தொடர்பாகஇந்தக்கூட்டத்தில்ஆராயப்பட்டது.

கடந்த 5 வருட கல்வி நிலை தொடர்பில் ஆராய்ந்து அடுத்து முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் ஆங்கில மொழி கல்வி மேம்படுத்தல் அங்குராப்பண நிகழ்வும் இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு ஆளுநர் மற்றும் மாவட்டச் செயலரால் ஆங்கில கற்கைக்கான தரவு சேமிப்பு கருவியும் வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன், வவுனியா வடக்கு வலக் கல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன், கோட்டக் கல்வி அதிகாரிகள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், மற்றும் வவுனியா தெற்கு மற்றும் வடக்கு வலய பாடசாலைகளின் அதிபர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி வளர்ச்சியில் வடமகாணத்திற்கு முன்னுரிமை கொடுக்க ஜனாதிபதி தயாராக இருக்கின்றார். கல்வியைப் பொறுத்தவரை எம்மில் பிழைகளை வைத்துக்கொண்டு அங்கு சென்று கேட்க முடியாது.

கல்வி வளங்கள் வடக்கில் சரியாகப் பகிரப்படவில்லை. வளங்கள்கிராமங்களைநோக்கியும்நகர்த்தப்படவேண்டும். மாகாணத்தின் கல்வி நிலை வீழ்ச்சிக்கான ஏனைய காரணங்களையும் நீங்கள்தான் கூறவேண்டும்.

எந்தவொரு விடயத்திலும் வடமகாணத்திற்கு முன்னுரிமை கொடுக்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். விவசாயம் மட்டுமல்ல எல்லா விடயத்திலும் முன்னுரிமை கொடுக்க ஜனாதிபதி தயாராக இருக்கிறார். ஆனால் கல்வியைப் பொறுத்தவரை இப்போது சென்று ஜனாதிபதியிடம் எதையும் கேட்க முடியாத நிலையிலேயே நான் இருக்கின்றேன். ஏனெனில் நாங்கள் செய்ய வேண்டியவையே இங்கு நிறைய இருக்கின்றன. ஆ

குறைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் முதலில் நீங்கள்தான் சொல்லவேண்டும். மன்னார் மாவட்டத்தில் சில பாடங்களுக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை என்கிறார்கள். தேநேரம் அங்கு ஆசிரியர்கள் மேலதிகமாகவும் இருக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் முதலில் தீர்வு காணப்படவேண்டும்.

போர் முடிவடைந்து 10 வருடங்களாகிவிட்டது. இனியும் அதனைக் காரணமாகக் கூறிக்கொண்டிருக்க முடியாது. ஆகவே கல்வியை விருத்தி வெசய்வதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள்தான் முதலில் எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஐ.தே.க தொழிலாளர் சங்கத்தின் தலைவராக நவீன் திஸாநாயக்க



கொழும்பு, ஜூன் 13

இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக முன்னாள் எம்.பி நவீன் திஸாநாயக்கவையும் அதன் பொதுச் செயலாளராக ஆர்.யோகராஜனையும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை நியமித்துள்ளது.

இதற்கு முன்னர் இதன் தலைவராக இருந்த ஹரீன் பெர்னாண்டோ ,செயலாளர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் பதவிகளில் தொடர நீதிமன்றம் மூலம் தடையுத்தரவை பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி இந்த நியமனங்களை வழங்கியுள்ளது.

தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக நவீன் இங்கு செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய அடையாள அட்டை வழங்கும் ஒருநாள் சேவை ஜூன் 22 மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 13

தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் ஒரு நாள் சேவை எதிர்வரும் ஜூன் 22ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று ஆள்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில்கொரோனாவைரஸ்தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு கடந்த மார்ச் 20ஆம் திகதி தொடக்கம் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளை அடுத்து தேசிய அடையாள அட்டையை வழங்கும் ஒருநாள் சேவையும் இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் ஜூன் 22ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் ஒரு நாள் சேவையை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஆள்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# பொதுமக்களின் மனக்குறைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி அலுவலகத்தில் குறைகேள் அதிகாரி

கொழும்பு, ஜூன் 13

பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக் குறைகளை கேட்டறிந்து உடனடியாக நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக ஜனாதிபதி அலுவலகத்திற்கு 'ஒம்புட்ஸ் மன்' குறைகேள் அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம். விக்ரமசிங்க ஒம்புட்ஸ்மன் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

நிர்வாக அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது அரச அதிகாரிகள் பொறுப்பிலிருந்து விலகியிருந்தால் அல்லது அதனைத் தாண்டி செயற்பட்டிருந்தால் அதன் மூலம் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் அல்லது அழுத்தங்கள் ஏற்பட்டிருக்குமானால் அது பற்றி கண்டறிந்து தீர்வுகளை வழங்குவது ஒம்புட்ஸ்மன் அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பதன் நோக்கமாகும்.

கொழும்பு 01, ஜனாதிபதி மாவத்தையில் உள்ள பழைய சார்ட்டட் வங்கிக் கட்டடத்தின் 03ஆவது மாடியில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு தமது முறைப்பாடுகளை அல்லது மனக் குறைகளை அலுவலகத்துக்கு வருகை தந்து தனிப்பட்ட முறையில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அல்லது 'ஜனாதிபதி அலுவலகத்தின் ஒம்புட்ஸ் மன், ஜனாதிபதி அலுலவகம், கொழும்பு 01' என்ற முகவரிக்கு தபால் மூலம் முறைப்பாடுகளையும் மனக்குறைகளையும் முன்வைக்க முடியும்.

011 - 2338073 என்ற தொலைபேசி/ தொலைநகல் இலக்கத்திற்கு அல்லது ombu-dsmanpr esidentsoffice.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தமது முறைப்பாடுகளை அனுப்பி வைக்க முடியும்.

மக்களின் இயல்பு வாழ்க்கையை அமைதியாக பேணுவதற்கு தடையாகவுள்ள பெருமளவிலான போதைப்பொருள் கடத்தல், சூழலுக்கு பாதிப்பான விடயங்கள், சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்கள் முறைப்பாடுகளை தமக்கு அனுப்பி வைக்க முடியும் என ஒம்புட்ஸ் மன் எஸ்.எம். விக்ரமசிங்க தெரிவித்தார்.

# முன்வைத்த காலை நான் பின்வைக்கவேமாட்டேன்

## கருணா சூளுரை

மட்டக்களப்பு, ஜூன் 12

தாம் முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்கப் போவதில்லை எனவும் நிச்சயமாகத் தேர்தலில் வெற்றி பெற்று மக்களுக்குச் சேவையாற்றுவோம் என்றும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) சூளுரைத்துள்ளார்.

அத்துடன், மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டத்துக்கான எல்லை எனக்குத் தெரியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் குற்றஞ்சாட்டுவது வேடிக்கையானது எனவும் 25 வருடங்களாக வரைபடங்களுடன் போராட்டக் காலங்களில் திரிந்தவர்கள் தாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத் தேர்தல் நிலைமை தொடர்பாக நேற்று வியாழக்கிழமை மாலை கல்முனையில் உள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் காலம் வரும்போது பலர் விமத்தனமான பிரசாரங்களை மேற்கொள்வார்கள். அதனையே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் மேற்கொள்கின்றார்.



நாங்கள் இவர் போன்று அநாகரிகமான அரசியலைச் செய்ய விரும்பவில்லை. அவர்களைக் குற்றம் சுமத்துவதற்குக்கூட விரும்பவில்லை. மக்கள் விழிப்படைந்திருக்கிறார்கள் . எங்களது நோக்கம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் கணவனை இழந்த பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் கூடுதலாக வாழ்கின்றனர். அவர்களது வாழ்க்கைச் சுமையைக் குறைக்க நாங்கள் தற்போது களமிறங்கி இருக்கின்றோம். எனவே நாம் முன் வைத்த காலை ஒருபோதும் பின் வைக்கப் போவதில்லை நிச்சயமாக வெற்றி பெற்று சேவையாற்றுவோம் – என்றார்.

# நுரைச்சோலை மின் நிலைய மின்பிறப்பாக்கி செயலிழப்பு

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின்பிறப்பாக்கி செயலிழந்துள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனை திருத்துவதற்கு 5 நாள்கள் தேவைப்படுவதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் நிலைமையை வழமைக்கு கொண்டு வருவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், மின்விநியோகத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் மினசக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# பத்திரிகைகளில் ஆசிரியர் தலையங்கம் பெறுகின்ற முக்கியத்துவம்



ஊடகங்களிலே மிக முக்கியமான இடத்தினை பெறுகின்ற ஊடகமாகப் பத்திரிகை காணப்படுகின்றது. உலகெங்கிலும் நடைபெறுகின்ற அன்றாடச் செய்திகளை சுருக்கமாக வானொலி மற்றும் தொலைக்காட்சியூடாக அறிந்து கொள்கின்றோம். ஆனால் அந்த செய்தியினுடைய விரிவான மற்றும் முழுமையான தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய ஊடகமாகக் காணப்படுவது பத்திரிகையாகும். ஓரிடத்துச் செய்திகளை உலகெங்கும் கொண்டு செல்லும் கருவி பத்திரிகை. தற்காலத்தில் மனித சமூகத்தினுடைய அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக பத்திரிகை மாறிவிட்டமை வரவேற்கத்தக்க விடயம்.

தற்காலத்தில் பல பத்திரிகைகள் நாளிதழ், வார இதழ், மாத இதழ், காலாண்டு இதழ் என வெளிவந்த வண்ணமே இருக்கின்றது. இன்றைய காலத்தில் பத்திரிகைகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. சில பத்திரிகைகள் காலையிலும், சில பத்திரிகைகள் மாலையிலும், சில பத்திரிகைகள் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் நாளொன்றிற்கு வெளிவருகின்றன்.

இவ்வாறு சிறப்பிடம் பெறுகின்ற பத்திரிகைகளில் ஆசிரியர் தலையங்கமானது மிகவும் தனித்தன்மை வாய்ந்ததாகவும், முக்கியத்துவம் பெறுபவையாகவும் காணப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

பத்திரிகைகளில் தலையங்கமானது பிரதம ஆசிரியர் அல்லது ஆசிரியர் அல்லது துணை ஆசிரியர்கள் அல்லது அதற்கென நியமிக்கப்பட்ட ஆசிரியர் குழுவினால் எழுதப்படுகின்றது.

இன்று நமது சமூகத்தில் பலர் பத்திரிகையினை எடுத்தால் வேறு விடயங்களினைப் பார்ப்பதற்கு முன்னர் ஆசிரியர் தலையங்கத்தினை பார்த்து அதனை வாசித்த பிறகுதான் ஏனைய விடயங்களினை வாசிப்பதை தங்களது வழக்கமாகக் கொண்டுள்ளதனை நாம் காணமுடிகின்றது. அந்தளவிற்கு ஆசிரியர் தலையங்கம் பத்திரிகைகளில் முதன்மையான பகுதியாகும்.

தலையங்கம் சமுதாயத்திற்கு பல பணியினைச் ஆற்றுகின்றது. பத்திரிகையின் குறிப்பிட்ட கொள்கை, கருத்தியல், திட்டம் பற்றிய கண்ணோட்டத்தைத் தலையங்கம் வெளிப்படுத்துகிறது. குறிப்பிட்ட கருத்தை அல்லது கொள்கைகளை உருவாக்குவதற்கும், அதனை விளக்குவதற்கும் தலையங்கம் துணைபுரிகின்றது. வாசகர்களைத் தனது கருத்துக்கு மாற்றும் வல்லமையும், ஆளுமையும் தலையங்கத்திற்குள்ளது. அதாவது ஒரு செய்தியை அல்லது கருத்தை தலையங்கத்தினூடாக கூறுவதன் மூலம் பொது மக்களின் கருத்தை உருவாக்கி, ஊக்குவிக்கும் பலம் தலையங்கத்திற்கு காணப்படும். அதேவேளை, பொது மக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை வெளிப்படுத்தி வழிகாட்டுகின்ற பணியினையும் அது செய்கின்றது.

சமுதாயத்தில் சில பிரச்சினைகள் எழுகின்ற போது அது குறித்து சமூகத்திற்கு எடுத்துரைத்து, அது குறித்து தெளிவுபடுத்தி, மேற்கொள்ள வேண்டிய தீர்வுகளை எடுத்துரைக்கின்ற பணியினையும் தலையங்கம் மேற்கொள்கின்றது.

வாசகர்களுக்கு நல்ல விடயங்களைக் கற்றுக் கொடுக்கவும், மக்களுடைய நலனைக் காக்கவும், நாட்டினுடைய வளத்தினைப் பேணவும் ஆசிரியர் தலையங்கம் எழுதப்படுகின்றது.

தலையங்கம் கட்டுரை போல் நீண்டதாக இருக்காது. தான் கூறவந்த கருத்தினை கட்டிறுக்கமாகச் சொல்லி விரிவான விளக்கத்தினை தரக்கூடியதாக அமையப்பெற்றிருக்கும். இதைப்பற்றிதான் தலையங்கம் எழுதப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை.




அதேபோன்று மிகவும் முக்கியமான விடயம் பற்றி தலையங்கம் அமையப் பெற்றிருக்கும். சமுதாயத்தோடு தொடர்புடைய, சமுதாயத்தைப் பாதிக்கின்ற, சமுதாயத்தின் நலன் கருதி தலையங்கங்கம் அமைந்திருக்கும்.

தலையங்கத்தினை எழுதுகின்ற பிரதம ஆசிரியர், ஆசிரியர், துணை ஆசிரியர் போன்றோரை நாம் சாதாரணமாக கூறிவிட முடியாது. அவர்கள் உயர்ந்த கொள்ளையும், சமூதாய நோக்கும், மனித நலனில் அக்கறையுடையவர்களாகவும் காணப்படுவர். இவற்றிற்கு மேலாக மற்றவர்களிடமிருந்து மாறுபட்ட சிந்தனை ஆற்றலையும், திறனையும் கொண்டவர்கள். புதிது புதிதான சிந்தனைப் போக்கும், புதியன படைக்கும் வேட்கையும், படைப்பாற்றலும் உடையவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

தலையங்கத்தினை எழுதுகின்ற ஆசிரியருக்கும் முக்கிய பணி காணப்படுகின்றது. ஆசிரியர் தமது கருத்தினை விளக்கும் வகையில் தலையங்கத்தினை எழுதலாம். அதுமட்டுமின்றி எந்தவிதமான பக்கச்சார்பும் இன்றி நடுநிலைமையுடன் நின்று தமது கருத்தினை வெளிப்படுத்த வேண்டும். தலையங்கம் எழுதுபவரின் சமூகப் பொறுப்பு முக்கியமானது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எழுதுபவரின் கருத்தியல், தனித்தன்மை, அறிவாற்றல், மொழி நடை போன்றவை மிக முக்கியமாகும். தலையங்கம் எழுதுபவர் எல்லா விடயங்களை நேர்மையாகவும், முழுமையாகவும் கூறுபவராக காணப்படுகின்றார். தம்மிடம் இருக்கின்ற சான்றுகளின் அடிப்படையில் சமூக நலனை முன்னிறுத்தி அறிவார்ந்த முடிவுகளை கூறுபவராக ஆசிரியர் காணப்படுகின்றார்.

திட்டவட்டமாக மக்களுக்குச் சொல்ல வேண்டிய செய்திகள் இருந்தால் அவைபற்றித் தலையங்கத்தில் விளக்கமாக ஆசிரியர் எழுதுகின்றார். மேலும் சமீபத்தில் நடைபெற்ற செய்திகள், நிகழ்ச்சிகள், பிரச்சினைகள், அரசியல் விடயங்கள், அவரச நிலைமைகள், பொருளாதார நிலைமைகள், நோய்கள், இயற்கை அழிவுகள், விழிப்புணர்வு கருத்துக்கள் போன்றவற்றை மையமாகக் கொண்டு ஆசிரியர் தனது தலையங்கத்தினை அமைக்கின்றார்.

எந்தவொரு பத்திரிகையினை எடுத்துக் கொண்டாலும் ஆசிரியர் தலையங்கம் என்பது மிக முக்கியமான உறுப்பாகக் காணப்படுகின்றது. நாம் பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தினை வாசித்தாலே அன்றாடம் நடைபெறுகின்ற பல்வேறு விடயங்களினை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். அதுமட்டுமில்லாது பல்வேறு விடயம் சமபந்தமான அறிவினை பெற்றுக் கொள்ளக்கூடியதாய் இருக்கும். நமது சமூகத்தில் பலர் ஆசிரியர் தலையங்கத்தினை வாசித்து அறிந்து கொள்வதன் மூலம்தான் பல்வேறு அறிவினை வளர்த்துக் கொள்கின்றனர். பொது மக்களும் தங்களது கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளவும் ஆசிரியர் தலையங்கம் துணைபுரிகின்றது. பலர் ஆசிரியர்தலையங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை முழுமையாக விளங்கிக் கொண்டு செயற்படுகின்றனர். இன்னும் சிலர் மேலோட்டமாக வாசிக்கின்றனர். ஒரு சிலர் அதனை வாசிக்காமலே இருக்கின்றனர். நாம் எந்தவொரு விடயத்தினையும் முழுமையாக அறிந்து கொண்டால்தான் பூரணமான அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியும். அரைகுறையாக தெரிந்து கொண்டு பூரண அறிவைப் பெறுவது சாத்தியமில்லாத விடயமாகும். ஆகவே பத்திரிகையின் பிரதான உறுப்பான ஆசிரியர் தலையங்கத்தினை முழுமையாக வாசித்து அதனை விளங்கிக் கொண்டு, அது பத்திரிகையில் பெறுகின்ற முக்கியத்துவத்தினை உணர்ந்து செயற்படுவது வாசகனுக்குச் சிறப்பாகும்.

## பலர் அறிந்திருந்தாலும் சிலர் அறியாத புதிர்

> தலையங்கம் சமுதாயத்திற்கு பல பணியினைச் ஆற்றுகின்றது. பத்திரிகையின் குறிப்பிட்ட கொள்கை, கருத்தியல், திட்டம் பற்றிய கண்ணோட்டத்தைத் தலையங்கம் வெளிப்படுத்துகிறது. குறிப்பிட்ட கருத்தை அல்லது கொள்கைகளை உருவாக்குவதற்கும், அதனை விளக்குவதற்கும் தலையங்கம் துணைபுரிகின்றது. வாசகர்களைத் தனது கருத்துக்கு மாற்றும் வல்லமையும், ஆளுமையும் தலையங்கத்திற்குள்ளது. அதாவது ஒரு செய்தியை அல்லது கருத்தை தலையங்கத்தினூடாக கூறுவதன் மூலம் பொது மக்களின் கருத்தை உருவாக்கி, ஊக்குவிக்கும் பலம் தலையங்கத்திற்கு காணப்படும்.

**பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்**
**சமூகவியல் துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**




# சித்திரப்போட்டி





படம் 1
வி. ரிதீஷிதன் - தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



படம் 2
உ. ரோஷித் - தரம் 4
படயாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'எனது ஆசை' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'ஒற்றுமை'**

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School,
Scarboough, Canada

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

என். வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

டி. ஹரிஸ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

எஸ். ஆ. எஸ். பர்வின் – தரம் 8
ஹிஜ்ரா முஸ்லிம் கனிஷ்ர வித்தியாலயம்,
அம்பன்பொல

ராமதாசன் ஹர்சிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

சந்திரகுமார் அவிநாஷ் – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

ஆர். பிரிதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அவிஷிகன் விமலானந்தன் – தரம் 1
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

த. கபிலாஷ் – தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ஆர். அக்ஷயன் – தரம் 8
தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி

வி. கமரூன் – தரம் 1
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

வி. ஹாருஷண் – தரம் 7
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

வி. கேது பிரியன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அத்வைதா ஹோபிநாத் – தரம் 1
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா
வித்தியாலயம்

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்

அன்றியா தக்ஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

கி. துஷாந்த் – தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா
வித்தியாலயம்

காலைக்கதிர் Kalaikkathir
ஒற்றுமை
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி



**இன்று (13/06/2020) தலைப்பு**
**ஒற்றுமை**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# அடுத்த வாரம் முதல் பரப்புரைக்கு தயாராகின்றன பிரதான கட்சிகள்

நாடாளுமன்றத் தேர்தலுக்கான புதிய திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பிரதான அரசியல் கட்சிகள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றிப் பரப்புரைக்குத் தயாராகி வருகின்றன.

அடுத்த வாரம் முதல் பரப்புரைகள் ஆரம்பமாகும் எனவும், தேர்தல் அறிக்கைகளும் தயாரிக்கப்படும் எனவும் பிரதான கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைகள் வடக்கு, கிழக்கில் அடுத்த வாரம் தொடக்கம் ஆரம்பமாகும் என்று அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி மக்கள் சந்திப்புகளை நடத்தவுள்ளோம். அதே வேளை, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடிப் பேசி தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பணிகளை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி**

நாட்டின் சகல இடங்களிலும் அடுத்த வாரம் முதல் மக்கள் சந்திப்புகளுடன் பரப்புரைகளை ஆரம்பிக்கவுள்ளோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர்மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

காத்திரமானதேர்தல்அறிக்கையை நாம் தயாரிக்கவுள்ளோம். மூவின மக்களின் நலன்கருதியதாக அந்த அறிக்கை இருக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

**ஐக்கிய தேசியக் கட்சி**

ஐக்கிய தேசிய கட்சியின் பரப்புரை அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று அதன்பொதுச்செயலாளர்அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களைப்பின்பற்றிஎங்கள் பரப்புரை நடவடிக்கைகள் அமைந்திருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கை எதிர்வரும் நாள்களில் உருவாக்கப்படும் எனவும், கூடிய விரைவில் அது வெளியாகும்.

அரசஊடகங்கள் மற்றும் ஏனைய அலைவரிசைகளைப் பயன்படுத்தி தேர்தல் பரப்புரையைமேற்கொள்வதற்கான சாதகமான நிலை ஆளும் கட்சிக்குக் காணப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி மக்களை வெற்றிகரமாகச்சென்றடைவதற்காக ஏனைய ஊடக வழிமுறைகளை பயன்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**ஐக்கிய மக்கள் சக்தி**

தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் காலம் தாழ்த்தாது நாடாளுமன்றத் தேர்தலுக்கானதிகதியைஅறிவித்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம்.

எமது பரப்புரைகள் அடுத்தவாரம் ஆரம்பமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவர் சேனக டிசில்வா தெரிவித்தார்.

கட்சியின் தேர்தல் அறிக்கை தயாரிப்பும் அடுத்த வாரம் நிறைவுக்கு வந்துவிடும்எனவும் அவர் மேலும் கூறினார்.

**ஜே.வி.பி.**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்ட தேர்தல் அறிக்கையைத் தொடர்ந்தும் பின்பற்றப்போவதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

தேர்தல் பரப்புரை அடுத்த வாரம் தொடக்கம் ஆரம்பமாகும் எனவும் ஜே.வி.பியின்பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

## தற்கொலை செய்தவர் எனக் கூறப்படும் சுயாதீன எழுத்தாளர் பற்றித் தகவல்கள்



கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பான மேலதிக தகவல்கள் வெளிவிந்துள்ளன.

அவர் ரஜீவ ஜெயவீர(வயது 64) எனவும், அவர் தான் இறப்பதற்கு முன்னர் தனது சகோதரனுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் எனவ்ம் தெரிவிக்கப்படுகிறது.

இவர் சிறிலங்கன் எயார் லைன்ஸின் முன்னாள் சிரேஷ்ட முகாமையாளராவார். அத்துடன் கொழும்பு ரெலிகிராப் இணையத்தளத்தின் சுயாதீன எழுத்தாளருமாவார். சிறிலங்கன் எயார்லைன்ஸில் நடக்கும் ஊழல்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இவர் தொடர்பாக கொழும்பு ரெலிகிராப் ஆசிரியர் உவிந்து குருகுலசூரிய குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் ரஜீவ ஜெயவீர தனது தற்கொலைக்கான காரணத்தை விளக்கி மூன்று பக்க கடிதத்தை எழுதியிருந்ததைத் தான் பார்த்தார் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கோவிட் 19 நிதிக்காக ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். அதே வேளை தனது ஊழியருக்காக பத்து லட்சம் ரூபாவை வைப்புச் செய்துள்ளார். அதேநேரம் துப்பாக்கியொன்றை ரூபா 151,500 கொடுத்து வாங்கியுள்ளார். சட்டத்தை மீறி அதை அவர்



வாங்கியமைக்காக வருத்தப்படுகிறார் எனக் குருகுலசூரிய தெரிவித்துள்ளார்.

ரஜீவ ஜெயவீர டுவிட்டரில் செயற்படுபவரெனவும் தற்போது அவரது டுவிட்டர் செயலிழந்துள்ளதாகவும் ஏன் என தெரியவில்லை எனவும் குருகுலசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

## பெரஹறா பார்க்க இம்முறை மக்களுக்கு அனுமதி இல்லை

இம்முறை பெரஹறா நிகழ்வுகளை பிரதான வணக்கஸ்தலங்கள் மற்றும் தேவாலயங்களில் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அறிவிறுத்தல் வழங்கியுள்ளார்.

இருப்பினும் அந்த பெரஹறா நிகழ்வுகளை பார்வையிட மக்களுக்கு அனுமதி இல்லை என நேற்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது பாரம்பரியம் மற்றும் மத கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி இந்த ஆண்டு பெரஹெர நிகழ்வுகளை விகாரைகளிலேயே ஏற்பாடு செய்ய வேண்டும் என ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவறுத் தியுள்ளார்.

கண்டி தலதா மாளிகை, கதிர்காமம் மற்றும் சப்ரகமுவ பகுதிகளில் இடம் பெறும் பெரஹறா நடவடிக்கைகள் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலுக்கமைய இடம்பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சூரிய மின் சக்தித் திட்டத்தை செயல்படுத்த 10 கோடி டொலர் கடன் இந்தியா தருகிறது



இலங்கையில் சூரிய மின் சக்தி திட்டத்தை செயல்படுத்த 10 கோடி டொலர் (சுமா ஆயிரத்து 850 கோடி ரூபா கடன் வசதியை வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த நிதி ஏற்றுமதி – இறக்குமதி வங்கி (எக்ஸிம் வங்கி) மூலம் வழங்கப்படும்.

இந்த நிதி மூலம் அரசு கட்டடங்களின் கூரைகளில் சூரிய மின்சக்தி அமைப்புகளை நிறுவுவதற்கும், திருகோணமலை, மொனராகலை, அனுராதபுரா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் தேர்ந் தெடுக்கப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு சூரிய மின்சக்தி திட்டங்களை வழங்குவதற்குமான திட்டத்தை செயல்படுத்த அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.06.2020 இல் வெளியிடப்பெற்றது.